“ විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා අප කැපවෙමු ”
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.

SLSI SYSTEM CERTIFIED ISO 9001
SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

| ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary | දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599<br>ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601<br>ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk | පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone | 011 - 2093000 |
|---|---|---|---|

| මගේ අංකය / எனது இலக்கம் / My No. | CSWP/ADM/18-38/FI/01-2019 | ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. | | දිනය / திகதி / Date | 2019/04/24 |
|---|---|---|---|---|---|

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**<u>அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/88(I), 03/2019, 02/2019, 06/2019 மற்றும் 05/2019 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.</u>**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/01/2019 மற்றும் 2019.04.18 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/88(I), 2019-01-29 | கடமையிலீடுபட்டிருக்கும் போது பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளால் காயமடையும் / நிரந்தரமாக அங்கவீனமடையும் அரச அலுவலர்களுக்கு / மாகாண அரச சேவை அலுவலர்களுக்கு / அரச கூட்டுத்தாபன அலுவலர்களுக்கு வைத்திய உதவிக் கொடுப்பனவு / நஷ்டஈடு வழங்குதல் மற்றும் பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளால் மரணமடையும் அவ்வாறான அலுவலர்களில்/ ஊழியர்களில் தங்கியிருப்போருக்கு நஷ்டஈடு வழங்குதல். |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2019, 2019-02-20 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2019, 2019-02-22 | பூரண சம்பளத்துடன் கூடிய விடுமுறைக்கான கட்டாய சேவைக்காலத்திற்குள் கடமையிலுள்ள அலுவலருக்கு சம்பளமற்ற கற்றல் விடுமுறை வழங்குதல். |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2019, 2019-02-27 | 2016 இலக்கம் 12 கொண்ட தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபனக்கோவையின் பகுதி I இன் பிரிவினைத் திருத்துதல். |

| | | |
|---|---|---|
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் **இலக்கம்** 15/2019, 2019-03-05 | அரசியல் உரிமைகளை அனுபவித்தல் தொடர்பான தாபனக் கோவையின் XXXII அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவினைத் திருத்துதல். |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),

ஒப்பமிட்டது - பிரதீப் யஸரத்ன,
பிரதான செயலாளர்,
மேல் மாகாணம்

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 06/2019

எனது இலக்கம் : EST-3/DICIP/06/0244
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2019.02.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபன விதிக்கோவையின் I ஆம் வகுதியின் பிரிவுகளை திருத்தியமைத்தல்**

தாபன விதிக்கோவையின் I ஆம் வகுதியின் VI ஆம் அத்தியாயத்தின் 2:9:6 ஆம் உப பிரிவு, XXVIII ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு, 9:2 ஆம் உப பிரிவு மற்றும் XXXI ஆம் அத்தியாயத்தின் 3:2 ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளின் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அப் பிரிவு 2016 ஆண்டு 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பின்வருமாறு திருத்தியமைப்பதற்கு 2017.01.31 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**I. VI ஆம் அத்தியாயத்தின் 2:9:6 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்தல்.**

2:9:6 பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கோ அல்லது பிரதான எழுதுநர்/ பிரதான அரசாங்க முகாமைத்துவ உதவியாளரொருவருக்கோ அல்லது திணைக்களத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு நபரொருவருக்கோ அன்றி வேறு எந்த அலுவலருக்கும் வரலாற்றுத் தாளைப் பார்ப்பதற்கு இடமளித்தல் கூடாது. உத்தியோகத்தரொருவரது முறையான வேண்டுகோளிற்கமைய அதிகாரம் பெற்ற எவரேனும் பதவிநிலை உத்தியோகத்தரொருவரதி முன்னிலையில் தமது வரலாற்றுத்தாளைப் பார்வையிடுவதற்கு அவருக்கு இடமளித்தல் வேண்டும். வரலாற்றுத் தாளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென ஒரு சான்றினை அத்தகைய ஒவ்வொரு பரிசோதனையின் பின்னரும் அவ்வுத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**II. XXVIII ஆம் அத்தியாயத்தின் 4:3 ஆம் உப பிரிவின் பின்னர் 4:4 ஆக புதிய உப பிரிவொன்றினை உள்ளடக்குதல்.**

4:4 மேலே 4:1, 4:2 மற்றும் 4:3 ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களைக் கோரும் சந்தர்ப்பத்தில் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு கோரப்படுகின்ற தகவல்களை வழங்குவதற்கு உரிய அதிகாரி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**III. XXVIII ஆம் அத்தியாயத்தின் 9:2 உப பிரிவின் பின்னர் 9:2:1 ஆக புதிய உப பிரிவொன்றினை உள்ளடக்குதல்.**

9:2:1 மேலே 9:2 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்துடைய தகவலறியும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**IV. XXXI ஆம் அத்தியாயத்தின் 3:2 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்தல்.**

3:2 அத்தகைய அரச உத்தியோகத்தரொருவரால் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச்சட்டத்தின் தகவல்களுக்கு பிரவேசிக்கும் உரிமைகளை நிராகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக அமைந்த 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அல்லது அரசாங்கம் அல்லது அரசாங்த் திணைக்களமொன்றினை விமர்சிப்பதற்கோ அல்லது கடமை சார்ந்த அல்லது சாராத அல்லது குறைகள் (உதா: தனது கடமையினை நிறைவேற்றுவதற்க போதியளவு ஆளணியினர் காணப்படாமைதொடர்பாக விமர்சித்தல் அல்லது முறைப்பாடுகள்; மேலதிக நிதி வழங்கப்படாமை தொடர்பாக திறைசேரியினை விமர்சித்தல் போன்றவை) பகிரங்கப்படுத்தல் அல்லது வெகுசன ஊடகத்தினைப் பயன்படுத்தப்படாதிருத்தல் வேண்டும்.

இவ் 3:2 ஆம் பிரிவுகளின் விடயங்களுக்காக "வெகுசன ஊடகம்" எனும் "கட்புல, செவிப்புல அல்லது எழுத்து மூலம், பொதுவாக மக்களுக்கு அல்லது ஒரு குழுவினருக்கு அல்லது அவர்களை அடையச் செய்யக்கூடிய மின்னஞ்சல், அச்சிடல்கள் அல்லது இரசாயன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி நபரொருவரோ ஒரு குழுவினரோ அல்லது நிறுவனமொன்றினால் செயற்படுத்தப்படும் தொடர்பாடல் செயற்பாடாகும்"

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி

செயலாளர்

பொது நிர்வாக மற்றும்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு